| | |
|---|---|
| TNVR13001026 2023 | சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை<br>முன்னிலை—திரு.ஜெ.செல்வன் ஜேசு ராஜா, எம்.ஏ.,எல்எல்.எம்.,<br>சார்பு நீதிபதி,<br>2024 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19 ம் நாள் திங்கட்கிழமை<br><u>I.A.No.1/2024 in O.S.No.291/2023</u> |

1. S.சுப்புலட்சுமி
2. ராமசாமி என்ற T.R.S.விஜய்ராம்
3. T.R.S.பாபு
4. T.R.S.சித்ராரமேஷ்
5. T.R.S.கார்த்திகேயன் ... மனுதாரர்கள்/வாதிகள்

—எதிரிடை—

1. V.R.நாராயணசாமி
2. S. பானுமதி
3. V.R. ராஜேந்திரன்
4. S.கௌசல்யா
5. G. சீத்தம்மாள்
6. R. குருவம்மாள்
7. அருப்புக்கோட்டை ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் அதன் பார்ட்னர் ஆர்.விஜயா மூலம்
8. வருவாய் வட்டாட்சியர், அருப்புக்கோட்டை
9. சார்பதிவாளர் (பத்திரங்கள் பதிவு) அருப்புக்கோட்டை
10. தமிழ்நாடு அரசுக்காக அதன் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் விருதுநகர் மூலம் ... 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 10 பிரதிவாதிகள்
11. அருப்புக்கோட்டை ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல் மில்ஸ் (பி) லிமிடெட் அதன் இயக்குநர் மூலம் ... 11 ம் எதிர்மனுதாரர்/ சேர்க்கப்பட வேண்டிய 11 ம் பிரதிவாதி

இந்த மனுவானது 09.08.2024 ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு கொண்டு வரப்பட்டபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.திருமுருகன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 6

பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ் அவர்கள் ஆஜராகியும், 7, 11 எதிர்மனுதாரர்கள் / 7 ம் பிரதிவாதி மற்றும் சேர்க்கப்படவேண்டிய 11 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.சுவாதீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், 8 முதல 10 எதிர்மனுதாரர்கள் / 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.வி.எஸ்.ராம்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

## உத்தரவு

மனுவில் கண்ட 11 ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 11 ம் பிரதிவாதியாக சேர்த்துக் கொண்டு அசல் வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி CPC Order 1 Rule 10(2) and Section 151 CPC–ன் படி மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்:

(i) மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள். தாவாச் சொத்தைப் பொறுத்து சொத்துரிமை விளம்புகையும், நிரந்தர உறுத்துக்கட்டளையும், 29.09.1986 தேதியிட்ட ஆவண எண் 1760.1986 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகையும் கோரி மனுதாரர்கள் 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளனர். 1 முதல் 6 பிரதிவாதிகளின் தந்தையான லேட்.வீ.வீரப்பநாயக்கர் என்பவரால் 7 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட 29.09.1986 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் "அருப்புக்கோட்டை ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் அதன் பார்ட்னர் ஆர்.விஜயா" என குறிப்பிடப்பட்டிருப்பதன் அடிப்படையிலும், வில்லங்கச்சான்றிதழில் எழுதி வாங்குபவர் "விஜயா" என பதிவேற்றம் செய்திருப்பதாலும், பிராதிலும் அவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அது தவறு என்றும் "அருப்புக்கோட்டை ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் (பி) லிமிடெட் அதன் டைரக்டர் மூலம்" என்பதே சரியானதாகும் என்று 7 ம் பிரதிவாதிதரப்பில் 18.12.2023 ம் தேதியன்று மெமோ தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மெமோவில், ஷை நிறுவனத்தின் இயக்குநர் யார் என்றோ ஆர்.விஜயா என்பவர் தற்போது ஷை

நிறுவனத்தின் இயக்குநராக இருந்து வருகிறாரா? அல்லது பார்ட்னராகவோ தொடர்கிறாரா? என்பது போன்ற முக்கியமான விபரங்கள் எதுவும் இல்லை. ஆனால் இன்றுவரை தாவாச் சொத்து "அருப்புக்கோட்டை ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் அதன் பார்ட்னர் ஆர்.விஜயா" என்ற பெயரிலேயே இருந்து வருவதால் எவ்வகையில் பார்த்தாலும் ஷை ஆர்.விஜயா அவர்கள் இவ்வழக்கில் முக்கியமான கட்சிக்கார் ஆவார். எனவே 7 ம் பிரதிவாதியின் பெயரை திருத்தம் செய்வது சட்டசம்மதமற்றதாகும்.

(ii) மேலும் அசல் வழக்கில் 7 ம் பிரதிவாதியாக "அருப்புக்கோட்டை ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் அதன் பார்ட்னர் ஆர்.விஜயா" என சேர்க்கப்பட்டிருக்கும் நிலையில் வழக்கில் சேர்க்கப்படாத "அருப்புக்கோட்டை ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் (பி) லிமிடெட் அதன் டைரக்டர்" என குறிப்பிட்டு 11 ம் எதிர்மனுதாரர் / சேர்க்கப்பட வேண்டிய 11 ம் பிரதிவாதி கையொப்பமிட்டு வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதில்லை. 7 ம் பிரதிவாதியான விஜயா அவர்களின்மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டால் விஜயா அவர்கள்தான் ஆஜராகவேண்டும். அதைவிடுத்து 7 ம் பிரதிவாதிக்கு பதிலாக 11 ம் எதிர்மனுதாரர் / சேர்க்கப்படவேண்டிய 11 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வக்காலத்தை Reject செய்யவேண்டியது அவசியமாகும். எனவே வீண் விவகாரங்களை தவிர்க்கும்பொருட்டு 11 ம் எதிர்மனுதாரரையும் கட்டுப்படுத்தி தீர்ப்பு பெறும் பொருட்டு 11 எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 11 ம் பிரதிவாதியாக சேர்த்துக் கொண்டு அசல் வழக்கினை மேல்நடத்த அனுமதியளித்து உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவினைத் தாக்கல் செய்துள்ளார்கள்.

3. <u>11 ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>

(i) மனுதாரர்களின் மனு சட்டப்படியும், சங்கதிகள் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. 29.09.1986 ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தை ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம் அதன் பார்ட்னர் விஜயா என்பவர் மூலம் அதன் உரிமையாளரிடமிருந்து தகுந்த பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் பெற்றுள்ளது ஒப்புக்கொள்ளப்படுகிறது. மேலும் 7 ம் பிரதிவாதியின் பெயரை தவறாகக் குறிப்பிட்டிருப்பதாக மெமோ தாக்கல்

செய்யப்பட்டதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால், 7ம் பிரதிவாதியின் பெயரை சரியாக திருத்தம் செய்ய வேண்டி மேற்படி மெமோ தாக்கல் செய்துள்ள நிலையில், 7ம் பிரதிவாதியின் பெயரை திருத்தம் செய்யாமல் 11ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் சேர்க்க வேண்டி தவறாக இம்மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர். மேலும் 29.09.1986 தேதியிட்ட ஆவணப்படி வழக்குச் சொத்தை அருப்புக்கோட்டை ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் அதன் பார்ட்னர்கள் மூலம் கிரையம் பெற்றுள்ள நிலையில், மேற்படி நிறுவனத்தின் பார்ட்னர்களில் ஒருவரான விஜயா என்பவரின் பெயரில் வில்லங்கச்சான்றிதழில் பதிவு ஏற்படுத்தப்பட்டுள்ளதால் மட்டும், மேற்படி விஜயா என்பவருக்கு மட்டுமே வழக்குச் சொத்தில் உரிமை உள்ளதாக கருத இயலாது. மேலும் மேற்படி பங்குதாரர் நிறுவனமானது, மேற்படி ஆர்.விஜயா மற்றும் இதர பங்குதாரர்களால் நடத்தப்பட்டு, விருதுநகர் நிறுவனங்கள் பதிவு செய்யும் பதிவாளரால் பதிவு எண் 36/1984 ன்படி பதிவு செய்யப்பட்டு, பின்னர் மேற்படி பங்கு நிறுவனமானது Section IX of Companies Act– ன்படி பிரைவேட் லிமிட்டெட் கம்பெனியாக மாற்றப்பட்டு, சென்னை நிறுவனங்கள் பதிவு செய்யும் பதிவாளரால் 24.06.1987 தேதியிட்ட பதிவு எண் 014569 ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. 11ம் பிரதிவாதி கம்பெனியானது ஏற்படுத்தப்பட்ட சமயத்தில், 12.05.2003 தேதியிட்ட மேற்படி நிறுவனக் குழுவின் அங்கீகாரத்தின்மூலம் மேற்படி விஜயராஜாமணியும் இயக்குநர் குழுவில் சேர்க்கப்பட்டார். எனவே மேற்படி விஜயராஜாமணி 11ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் இயக்குநராக 27.01.2015 வரை செயல்பட்டு பின்னர் மேற்படி பதவியை ராஜிநாமா செய்தபின்னர் மேற்படி கம்பெனியானது இதர இயக்குநர்களால் நடத்தப்பட்டு, முறையாக சென்னை கம்பெனிகள் பதிவாளரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்தின் பதிவானது மேற்படி விஜயராஜாமணி என்ற இயக்குநர் பெயரில் பதிவாகியுள்ள சங்கதியானது மனுதாரர்கள் / வாதிகளுக்கு நன்கு தெரிந்திருந்தும் அவரது பெயரை விஜயா என தவறாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ii) 7ம் எதிர்மனுதாரர் தரப்பில், 7ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் பெயரை சரியாகக் குறிப்பிட்டு திருத்தம் செய்ய வேண்டி மெமோ தாக்கல் செய்துள்ள நிலையில்,

மனுதாரர்கள் 11ம் எதிர்மனுதாரரை சேர்க்க வேண்டி தவறாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி 11ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் சேர்க்கப்படும் பட்சத்தில், அசல் வழக்கானது தேவையற்ற தரப்பினரை சேர்த்த குற்றத்திற்கு உள்ளாக நேரிடும். மேலும், 7 மற்றும் 11 பிரதிவாதிகள் இருவரும் சட்டப்படியான நிறுவனம் என்பதாலும் 7ம் எதிர்மனுதாரர் நிறுவனமானது 11ம் எதிர்மனுதாரர் நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளதாலும், 7 மற்றும் 11 பிரதிவாதிகள் இருவரும் உரிமையாளர்களாக தனித்து வழக்குச் சொத்தில் உரிமை கோர முடியாது. மேலும் 7ம் பிரதிவாதியின் பெயரானது 11ம் பிரதிவாதியாக மறுசீரமைக்கப்பட்டபின்னர், 7ம் பிரதிவாதியின் நிலையானது இல்லாமல் போய்விடும். மேலும் 7ம் பிரதிவாதியின் பெயரை மாற்றம் செய்யாமல், மேற்படி நிறுவனத்தில் பதிவில் இல்லாத 7ம் பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்து, 7ம் பிரதிவாதி ஆஜராகவில்லை என்று 10.06.2024 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்துள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து, 7ம் பிரதிவாதியின் பெயருக்கு பதிலாக 11ம் பிரதிவாதி பெயரைக் குறிப்பிட்டு அசல் வழக்கை திருத்தம் செய்ய உத்தரவிட வேண்டும்.

4. மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2 சான்றாவணங்களும், 11ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1, எ.ம.சா.ஆ.2 சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5.** இம்மனு அனுமதிக்கத்தக்கதா, இல்லையா என்பதே தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

**6.** இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**7**. வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து சொத்துரிமை விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் ஆவணம் இல்லா நிலையது என விளம்புகைப் பரிகாரங்கள்

கோரி மனுதாரர்கள் / வாதிகளால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, 1 முதல் 6 பிரதிவாதிகளால் சமரசக் குறிப்பாணை மற்றும் 8 முதல் 10 பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, 7ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாமல் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இந்நிலையில், அசல் வழக்கில் 7ம் பிரதிவாதியாக "அருப்புக்கோட்டை ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் அதன் பார்ட்னர் ஆர்.விஜயா" என சேர்க்கப்பட்டிருக்கும் நிலையில் வழக்கில் சேர்க்கப்படாத "அருப்புக்கோட்டை ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் (பி) லிமிடெட் அதன் டைரக்டர்" என குறிப்பிட்டு 11ம் எதிர்மனுதாரர் / சேர்க்கப்பட வேண்டிய 11ம் பிரதிவாதி கையொப்பமிட்டு வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே வீண் விவகாரங்களை தவிர்க்கும்பொருட்டு 11ம் எதிர்மனுதாரரையும் கட்டுப்படுத்தி தீர்ப்பு பெறும் பொருட்டு 11 எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 11ம் பிரதிவாதியாக சேர்த்துக் கொண்டு அசல் வழக்கினை மேல்நடத்த அனுமதியளிக்க வேண்டும் என்பதாக மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. .

8. ஆனால், 7ம் பிரதிவாதியின் பெயரை சரியாக திருத்தம் செய்ய வேண்டி 7ம் எதிர்மனுதாரர் தரப்பில் மெமோ தாக்கல் செய்துள்ள நிலையில், 7ம் பிரதிவாதியின் பெயரை திருத்தம் செய்யாமல் 11ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் சேர்க்க வேண்டி தவறாக இம்மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து, 7ம் பிரதிவாதியின் பெயருக்கு பதிலாக 11ம் பிரதிவாதி பெயரைக் குறிப்பிட்டு அசல் வழக்கை திருத்தம் செய்ய உத்தரவிட வேண்டும் என்பதாக 11ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. 7ம் பிரதிவாதியாக காட்டப்பட்டுள்ள "அருப்புக்கோட்டை ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் அதன் பார்ட்னர் ஆர்.விஜயா" என்ற பங்குதாரர் நிறுவனமானது தற்போது "அருப்புக்கோட்டை ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் (பி) லிமிடெட் அதன் டைரக்டர்" என மாற்றம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக 11ம் எதிர்மனுதாரர் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டு அதற்கான ஆவணங்களும் எ.ம.சா.ஆ.1, எ.ம.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களிலிருந்து பார்க்கும்போது, 7ம் பிரதிவாதி

நிறுவனமானது தற்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டு, 11ம் எதிர்மனுதாரர் பெயரில் இருந்து வருவதாக தெரிய வருகிறது. எனவே, ஒரே சொத்துக்கு இரண்டு உரிமையாளர்களுக்கு எதிராக வாதிகள் வழக்கு நடத்த வேண்டிய அவசியம் இல்லை எனவும், தாவா சொத்துக்கு ஒரே உரிமையாளர்தான் இருக்கின்ற சூழ்நிலையில், அந்த உரிமையாளருக்கு எதிராக மட்டும் வழக்கு நடத்தினால் போதுமானது எனவும் இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது.

**9.** 7ம் பிரதிவாதியான பங்குதாரர் நிறுவனத்தின் பெயரில்தான் தாவா சொத்து வாங்கப்பட்டுள்ளதாக வாதிகள் ஒப்புக்கொண்டுள்ள சூழ்நிலையில், தனிப்பட்ட நபரான விஜயா சம்பந்தமாக வாதிகள் அக்கறை கொள்ள அவசியம் இல்லை என இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது. 7ம் பிரதிவாதியான பங்குதாரர் நிறுவனம் தற்போது பிரைவேட் லிமிட்டெட் கம்பெனியாக மாற்றப்பட்டுவிட்ட சூழ்நிலையில், மேற்படி பிரைவேட் லிமிட்டெட் கம்பெனிதான் தற்போது தாவாச் சொத்துக்கு உரிமை கோரக்கூடிய நபர் என தெளிவாக தெரிய வருகிறது. எனவே, 7ம் பிரதிவாதியின் பெயரை தற்போதைய நிறுவனத்தின் பெயராக சீர்திருத்தம் செய்வதன் மூலம் வாதிகளுக்கு முறையாக வழக்கு நடத்த வாய்ப்புள்ளது. அதை விட்டுவிட்டு தாவாச் சொத்துக்கு 2 உரிமையாளர்கள் இருப்பதுபோல காண்பித்து 11ம் எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்ப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது.

**10.** தாவாச் சொத்துக்கு நாளதுதேதிவரை மேற்படி விஜயா பெயரில்தான் வில்லங்கச்சான்றிதழ் மற்றும் டவுண் சர்வே ரிஜிஸ்டர் உள்ளதாக மனுதாரர்கள்தரப்பில் ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2 தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், மேற்படி விஜயா என்பவர் தற்போது 7ம் பிரதிவாதி நிறுவனத்தில் இல்லை எனவும், 7ம் பிரதிவாதி நிறுவனமானது 11ம் எதிர்மனுதாரர் நிறுவனம் பெயரில் இயங்கி வருகிறது எனவும் எ.ம.சா.ஆ.1, எ.ம.சா.ஆ.2 ஆவணங்கள்மூலம் தெரிய வருவதால், அதுசம்பந்தமாக அசல் வழக்கை முறையாக திருத்துவதுதான் சரியானது என இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது. ஒருவேளை ஆவண எண்.1760/1986ல் "அருப்புக்கோட்டை ஸ்ரீ விஜயலட்சுமி

டெக்ஸ்டைல்ஸ் அதன் பார்ட்னர் ஆர்.விஜயா" என்று இருப்பதால் அதனை காண்பிக்காமல் எவ்வாறு வழக்கு நடத்த முடியும் என மனுதாரர்களுக்கு தயக்கம் இருக்கும்பட்சத்தில் மேற்படி பங்குதாரர் நிறுவன பெயரையும் காண்பித்து தற்போது "அருப்புக்கோட்டை ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் (பி) லிமிடெட் அதன் டைரக்டர்" மூலம் இயங்கி வருவதாக அசல் வழக்கை திருத்திக்கொள்ளலாம் என இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது. எனவே, 11ம் எதிர்மனுதாரரை தனியாக அசல் வழக்கில் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை எனவும், 7ம் பிரதிவாதியின் பெயர் சம்பந்தமாக திருத்தம் செய்தாலே போதுமானது எனவும் இந்நீதிமன்றம் தெளிவுபடுத்தி இந்த மனுவை அனுமதிக்க வேண்டிய அவசியம் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11**. முடிவாக இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு, 7ம் பிரதிவாதியின் பெயர் சம்பந்தமாக "அருப்புக்கோட்டை ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் அதன் பார்ட்னர் ஆர்.விஜயா"–ஆனது தற்போது "அருப்புக்கோட்டை ஸ்ரீ விஜயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் (பி) லிமிடெட் அதன் டைரக்டர் மூலம்" என மனுதாரர்கள் திருத்தம் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்த பின்னர், என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

J SELVAN JESU RAJA

Digitally signed by J SELVAN JESU RAJA
Date: 2024.08.19 16:32:13 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u> – இல்லை.

மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் –

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 09.08.2024 | வில்லங்கச்சான்றிதழ் | அசல் |
| ம.சா.ஆ.2 | 09.08.2024 | Certificate of Extract from the Town Survey Land Register | அசல் |

11ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் -

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 01.02.2021 | Certificate of Extract of the Resolutions | நகல் |
| எ.ம.சா.ஆ.1 | – | Memorandum of Association and Articles of Association | நகல் |

J SELVAN JESU RAJA

Digitally signed by J SELVAN JESU RAJA
Date: 2024.08.19 16:32:22 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
I.A.No.1/2024 in O.S.No.291/2023
உத்தரவு நாள் –19.08.2024